# கீழக்கரை நகர்மன்ற 30.07.2019–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் :1**

இந்நகராட்சியில் மொத்தம் 21 வார்டுகள் உள்ளன. நகராட்சியின் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 38,355 ஆகும். இந்நகராட்சியில் தற்போதையை மக்கள் தொகை 50189 ஆகும். நகராட்சி பகுதிகளில் தினந்தோறும் சேகரமாகும் குப்பையின் அளவு 18 மெட்ரிக் டன் ஆகும். இந்நகராட்சியில் சேகரம் ஆகும் அனைத்தும் குப்பை கழிவுகளும் இந்நகராட்சியிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தில்லையேந்தல் ஊராட்சிக்குட்பட்ட பள்ளமோர்குளம் கிராமப் பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய உரக்கிடங்கில் 2016–17 ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சிப்பம் 6 (Package VI) காவலர் ஓய்வு அறை, தெருவிளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று, முடிவுற்ற நிலையில் தற்போது சிப்பம் 5 (Package-V)–ல் குப்பைகளை பிரித்தெடுக்க 1/3rd Roof Shed அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அதனை தொடர்ந்து 2018-19 & 2019–2020 ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் (Fecal Sludge and Septage Management) மனித கழிவுகளை உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த திட்டப்பணிகள் அனைத்தும் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு இந்நகராட்சி உரக்கிடங்கில் மின்சார வசதிகள் ஏதும் இல்லை. இதனால் இத்திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் மோட்டார்கள் இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது.

மேற்காணும் திட்டப்பணிகள் அனைத்தும் நல்லமுறையில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக இந்நகராட்சி புதிய உரக்கிடங்கிற்கு புதிதாக மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் அமைத்து உயர்மின் அழுத்த மும்முனை இணைப்பு (3 phase) பெறுவதற்கு புதிதாக 100KVA மின்மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. புதிதாக 100KVA மின்மாற்றி அமைப்பதற்கு முதற்கட்டமாக LT- CT Box மற்றும் இதர மின்சாதனப் பொருட்கள் பொருத்தும் பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இப்பணிகள் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, மதிப்பீடு தயார் செய்வதற்கு ஏதுவாக பொதுப்பணித்துறை / குடிநீர் வடிகால் வாரிய விலை விகிதங்களின் நிலையான அட்டவணையில் (Standard Schedule of Rates) விலைவிகிதங்கள் குறிப்பிடப்படாத மின்சாதனப் பொருட்கள், வேலைக்கூலி மற்றும் போக்குவரத்து கட்டணங்களுக்கு இவ்வலுவலக பொறியாளர்களின் 30.05.2019–ந் தேதிய அறிக்கையின்படி, உள்ளூர் விலைப்புள்ளிகள் 28.06.2019–ந் தேதி பெறப்பட்டு, இந்நகர்மன்றத்தில் 28.06.2019–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.7,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மேற்காணும் திட்டங்களுக்கு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் இச்செலவினத்தை ஈடு செய்யவும், இந்நகராட்சி பொறியாளரால் தெரிவிக்கப்பட்டு, இப்பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 409/2019/ இ1)**

**அலுவலக குறிப்பு**

1) இந்நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில், மின்சார வசதி செய்ய முதல் கட்டமாக LT- CT Box பொருத்தும் பணி ரூ. 7,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் இச்செலவினத்தை, மேற்காணும் திட்டப்பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் திட்ட மானியத்திலிருந்து ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.590 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :2</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பொதுமக்களால் வெளியேற்றப்படும் கழிவுநீர் இந்நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள மூடியுடன் கூடிய மழைநீர் வாறுகால் வடிகால் வழியாக செல்கிறது. இந்நிலையில் இந்நகராட்சியில் செல்லும் வாகனங்களினால் வாறுகாலின் பக்கச் சுவர்களில் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் செல்வதால் பொதுமக்கள், வாகன ஓட்டுபவர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. மேலும் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

ஆகவே, மேற்காணும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்நகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மூடியுடன் கூடிய கழிவுநீர் வாறுகால்களை 2019–20 ஆம் ஆண்டுக்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணி செய்வதற்கு ரூ.3,75,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**<u>(கோப்பு எண். 538 /2019/இ1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. பொதுசுகாதார நலன் மற்றும் இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.3,75,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.591 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :3</u>**

**கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகள் பொதுமக்களுக்கும் காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் குடிநீர் திட்ட ஆதாரங்களாக விளங்கும் சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்றும் நிலையத்திலிருந்து, 21–வது வார்டு பகுதி மணல்மேட்டில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றம் (Pumping) செய்யப்பட்டு, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகம் செய்ய அமைக்கப்பட்டுள்ள பகிர்மான குழாய்களில் ஆங்காங்கே உடைந்து கசிவு ஏற்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதால் குடிநீர் குழாய்களை உடனடியாக சரி செய்து தருமாறு இவ்வலுவலக குடிநீர் திட்ட பொருத்துநரால் கோரப்பட்டுள்ளது.**

**ஆகவே, மேற்காணும் பகிர்மான குழாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சரி செய்யும் பொருட்டு குடிநீர் பகிர்மான குழாய்களை 2019–20 ஆம் ஆண்டுக்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்வதற்கு ரூ.3,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.**

**<u>(கோப்பு எண். 562/2019/இ1)</u>**

அலுவலகக் குறிப்பு:

1. இந்நகர் பொதுமக்களின் குடிநீரின் அவசியத்தை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.3,50,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.592அனுமதிக்கப்பட்டது.

பொருள் :4

கீழக்கரை நகராட்சி வார்டு எண் 1 முதல் 21 முடிய உள்ள பகுதிகளில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள விடுபட்ட குடும்பங்களை உரிய படிவத்தில் கணக்கெடுப்பு செய்யப்பட்டு ஏற்கனவே அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.17464/2018/UPA.1, நாள்.03.07.2019ன்படி ஏற்கனவே கணக்கெடுப்பு செய்த 5120 குடும்பங்களை நகராட்சி நிர்வாக இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து மீண்டும் கள ஆய்வு செய்து, மேற்படி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து பணி முடிக்க உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் பணிகளை மேற்கொள்ள எழுதுப் பொருள் மற்றும் அச்சுப் பொருட்கள் வாங்கிடவும் கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிக்காகவும் மற்றும் இதர செலவினஙகளுக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண்.117/2019/எச்1)

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அஙகரிக்கலாம்

தீர்மானம் எண்.593அனுமதிக்கப்பட்டது.

பொருள் :5

கீழக்கரை நகராட்சி TN65 S4101 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளான ஆயில் சர்வீஸ், 5 டோர் செக்கப், A.C. சர்வீஸ், 4 வீல் பேரிங் செக்கப், வீல் அலாய்மென்ட், ரேடியேட்டர் கிளீனிங், வாட்டர் சர்வீஸ், சென்சார் செக்கப் மற்றும் இதர பழுதுகளை நீக்கம் செய்வதற்கு இந்நகர்மன்றத்தில் 28.06.2019—ன்படி அனுமதி பெற்று, அதனடிப்படையில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 15.07.2019—ந் தேதி வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் / நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1) | ஏ.ஆர். என்ஜினியரிங் ஒர்க்ஸ்,<br>16/7C ஏ.கே.எஸ். காம்ப்ளக்ஸ்,<br>பி.1 போலிஸ் ஸ்டேசன் அருகில்,<br>ஜி.ஹெச். ரோடு,<br>இராமநாதபுரம். | ரூ.56,603/—<br>(CGST & SGST உட்பட) |
| 2) | என்.எஸ். ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>202/3A பேராவூர் போஸ்ட்<br>தேவிப்பட்டினம் ரோடு | ரூ.54,463/—<br>(CGST & SGST உட்பட) |

| | | |
|---|---|---|
| | இராமநாதபுரம். | |
| 3) | ஸ்ரீ விக்னேஷ் என்ஜினியரிங் ஒர்க்ஸ்<br>மஹர் நோன்பு திடல் அருகில்<br>கேணிக்கரை, தேவிப்பட்டினம் ரோடு<br>இராமநாதபுரம். | ரூ.58,769/—<br>(CGST & SGST உட்பட) |

(கோப்பு எண். 519/2019/ இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.54,463/—க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள என்.எஸ்.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2. குறைந்த விலைப்புள்ளி ரூ.54,463/—ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.594அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :6</u>

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 அண்ணா நகர், முத்துச்சாமிபுரம் மற்றும் வார்டு எண்.9 பணியக்காரத் தெரு ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் பயன்படுத்தப்படும் வீட்டு கழிவுநீர் சாலைகளில் செல்கிறது. அப்பகுதியில் கழிவுநீர் சாலையில் செல்வதால் பொதுமக்கள், வாகன ஒட்டுபவர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் இப்பகுதி சாலையில் செல்வதற்கு மிகவும் சிரமத்திற்கு ஆளாக வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. மேலும் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

மேற்காணும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வார்டு எண்.2 அண்ணா நகர், முத்துச்சாமிபுரம் மற்றும் வார்டு எண்.9 பணியக்காரத் தெரு ஆகிய பகுதிகளில் புதிதாக 6'' பி.வி.சி. குழாய்கள் அமைத்து கழிவுநீர் வெளியேற்றும் பணி செய்ய ரூ.4,80,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

<u>(கோப்பு எண். 554 /2019/இ1)</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.4,80,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.595அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :7</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பினை தொடர்ந்து கீழக்கரையை தலைமையிடமாக கொண்டு தனி வட்டம் அமைத்து அதற்கான வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பதற்கு கீழக்கரை நகராட்சி அலுவலகத்தின் தரைதளம் மற்றும் மேல்தளம்

ஆகியவற்றில் உள்ள பகுதிகளை தேர்வு செய்து, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.எண்.A4/39619/2012, நாள்.06.09.2014–ல் தெரிவித்துள்ளபடி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் 2997/2014/TP3, நாள்.20.01.2015–ம் தேதிய அனுமதியின்படி கீழக்கரை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு, இந்நகராட்சி அலுவலக கட்டிடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 14.03.2015 ம் தேதி முதல் வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், அரசு ஆணை (MS) எண்.40 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.04.2018ன்படி, இந்நகராட்சிக்கு பொறியாளர் நிலை–III பணியிடம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்நகராட்சி பொறியாளருக்கென தனி அறை ஒதுக்கீடு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இவ்வலுவலகத்தின் பின்புறம் அமைந்துள்ள கூடுதல் கட்டிடத்தின் மேல்தளத்தில் பொறியாளருக்கு அறை ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, மேற்காணும் அறையில் அலுமினிய தடுப்புகள், வர்ணம் பூசும் பணி மற்றும் கூடுதல் வசதிகள் செய்வதற்கு ரூ.2,25,000/–க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 639 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.2,25,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.596 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :8**

கீழக்கரை நகராட்சி வார்டு எண்.2 முத்துச்சாமிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பிடம், வார்டு எண்.3 மீனவர் குப்பத்தில் அமைக்கப்பட்டுள்ள 2 எண்ணம் சமுதாய கழிப்பிடம், வார்டு எண். 6 மலேரியா அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடம் மற்றும் வார்டு எண்.6 நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பிடங்கள் ஆக மொத்தம் 5 எண்ணம் கழிப்பிடங்கள் இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்காணும் கழிப்பிடங்களில் முறையான வசதிகள் இல்லாமல் பொதுமக்கள் அதனை பயன்படுத்துவதில் சிரமத்திற்கு ஆளாவதால் அவற்றில் கண்டுள்ள குறைபாடுகளான ஆண், பெண் படங்கள் வரைதல், சிறுநீர் கழிப்பதற்கான வசதி தனியாக ஏற்படுத்துதல், கதவுகள் பழுது நீக்கம், காற்றை வெளியேற்றும் விசிறி (Exhaust Fan) புதிதாக பொருத்துதல், கை கழுவும் பேசன், Western Toilet புதிதாக பொருத்துதல் மின்வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்தல், செப்டிக் டேங்க் பழுது நீக்கம் செய்தல், குளியல் அறை புதிதாக அமைத்தல், பைப்லைன் சரி செய்தல் மற்றும் இதர பழுது நீக்கப் பணிகள் மேற்கொண்டு, குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்து தருமாறு இவ்வலுவலக தூய்மை இந்தியா இயக்க (SBM) மேற்பார்வையாளர் மற்றும் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

இந்நகராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மேற்காணும் 5 எண்ணம் பொது கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் 2019–20 ஆம் ஆண்டுக்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணி செய்வதற்கு ரூ.3,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 353 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. இந்நகர் பகுதி மக்களின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.3,50,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.597 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :9**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பொதுமக்களால் வெளியேற்றப்படும் கழிவுநீர் இந்நகராட்சியால் PVC கழிவு நீர் குழாய்கள் மற்றும் மூடிகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் PVC குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு ஆங்காங்கே கழிவுநீர் சாலையில் செல்வதால் பொதுமக்கள், வாகன ஓட்டுபவர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. மேலும் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

ஆகவே, மேற்காணும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு கழிவு நீர் குழாய்கள் மற்றும் மூடிகளை 2019–20 ஆம் ஆண்டுக்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணி செய்வதற்கு ரூ.3,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 627 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. பொதுசுகாதார நலன் மற்றும் இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.3,50,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.598 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :10**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைப்பு (Fecal Sludge Treatment Plant) அமைக்க ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி IUDM 2018-19

திட்டத்தின் கீழ் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு, உத்தேச மதிப்பீடு ரூ.217.95 லட்சத்திற்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டது. இந்த திட்ட மதிப்பீட்டிற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018 நாள்.12.11.2018–ன்படி IUDM 2018-19 திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

மேற்கூறிய உரக்கிடங்கில், திண்டுகல், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி மூலமாக மண் பரிசோதனை செய்ததில், மண்ணின் பழுதாஙகும் திறன் (Safe Bearing Capacity of Soil) குறைவாக உள்ளதால், மண்ணின் தன்மைக்கு ஏற்ப, (Pile Foundation) அஸ்திவாரம் அமைத்து கழிவு நீர் சுத்தகரிப்பு கட்டிட அமைப்புகள் (Fecal Sludge Treatment Plant) கட்டுமாறு திண்டுக்கல், அண்ணா பல்கலைக்கழகத்தால் தொழில்நுட்ப ஆலோசனை அறிக்கை வழஙகப்பட்டதின்படி, திருத்திய திட்ட மதிப்பீடு (Revised Project Report) ரூ.340.00 இலட்சத்திற்கு (IUDM -2018-19 Share-Rs.113.90 & IUDM -2019-20 Share- Rs.113.90 & SBM GOI 33% share Rs.112.20) நிதி ஒதுக்கீடு செய்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018–1 நாள்.11.12.2018–ன் படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/2018/DO2, நாள்.11.12.2018–ன் படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் 22.01.2019–ம் தேதி மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதனை தொடர்ந்து 18.02.2019–ம் தேதிய இந்நகர்மன்ற அனுமதியின்படி 06.03.2019–ந் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டது. தற்பொழுது இப்பணியினை மேற்கொள்ள கட்டிட வடிவமைப்பு (Structural Design) மற்றும் விழிம்பு நிலை (Contour Level) அறிக்கை பெறுவதற்குரிய கட்டணம் ரூ. 88,500/– செலுத்துமாறு திண்டுக்கல் அண்ணா பல்கலைக்கழகம், துறைத்தலைவர் அவர்களிடமிருந்து 08.11.2018ம் தேதி கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காணும் பணிக்குரிய தொகை ரூ. 88,500/–ஐ திண்டுக்கல் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கு 16.07.2019ம் தேதி இந்நகராட்சிப் பொறியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**<u>(கோப்பு எண். 1022/2019/இ1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. இந்நகராட்சி உரக்கிடஙகில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைக்கும் (Fecal Sludge Treatment Plant) பணியினை மேற்கொள்ள கட்டிட வடிவமைப்பு (Structural Design) மற்றும் விழிம்பு நிலை (Contour Level) அறிக்கை பெறுவதற்குரிய கட்டணம் ரூ. 88,500/–ஐ திண்டுக்கல் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.599 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :11</u>**

தூய்மை இந்தியா இயக்கம் (Swachh Bharat Scheme) -திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19 (Solid Waste Management Scheme)–ன் கீழ் கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையங்கள் அமைக்கும் பணி (Construction of Micro Compost Centre) நடைபெற்று வருகிறது. இந்த திட்டப்பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு மின்சார வசதிகள் ஏதும் இல்லை. ஆகையால் திட்டப்பணியினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய

உரக்கிடங்கிற்கு மும்முனை இணைப்பு (3 phase) வழங்குவதற்கு புதிய மின் மீட்டர் இணைப்பு கட்டணம் ரூ.6,259/– செலுத்த கோரி கீழக்கரை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், உதவி மின்பொறியாளர் அவர்களிடமிருந்து 16.07.2019–ம் தேதி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

மேற்படி பட்டியல் ரூ.6,259/– மட்டும் கீழக்கரை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், உதவி மின்பொறியாளர் அவர்களுக்கு செலுத்துவதற்கு இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கிற்கு மும்முனை இணைப்பு (3 phase) வழங்குவதற்குரிய புதிய மின் மீட்டர் இணைப்பு கட்டணம் ரூ.6,259/–ஐ உதவி மின்பொறியாளர் கீழக்கரை அவர்களுக்கு செலுத்துவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.600 அனுமதிக்கப்பட்டது.**

ஒம்/– ஆ. தனலெட்சுமி,பி.காம்
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.